# திருமுறையின் சிறப்பு

ஆ. நாகப்பன்
மலேசியா

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!

உயிர்களைச் சிவமாக்கி ஆளும் பெருங்கருணைக் கடவுளாகிய சிவபெருமான் உயிர்களின் ஈடேற்றத்தின் பொருட்டு அருளிய நூல்கள் பல. அவற்றைச் சாத்திரம், தோத்திரம், ஆகமம், புராணம் என்று நால்வகைப்படுத்தி ஆராயலாம். சைவசமயம் இந்த நால்வகை நூல்களையும் பெற்று விளங்கும் தனிப்பெரும் சமயமாகும். இவற்றுள் பன்னிரு திருமுறைகள் தோத்திரம் என்னும் நூல் வகையில் அடங்கும்.

தோத்திரம் என்பது போற்றிப் புகழுதல் என்று பொருள்படும். திருமுறை சைவசமயத்தின் முழுமுதல் பரம்பொருளாகிய சிவபெருமானைப் போற்றிப் புகழ்வதோடு சைவசமயத்தின் உட்பொருள்களையெல்லாம் தெள்ளிதின் விளக்கும் இலக்கியமாகவும் திகழ்கிறது.

**நூல் வரலாறு**

திருவாரூரில் இருந்து தமிழாட்சி செய்து வந்த இராஜ ராஜ சோழனான அபயகுலசேகரர் திருக்கோயில் ஒன்றில் சிவனடியார் ஒருவர் "மூவர் தமிழில்" பாடிய சில திருப்பாடல்களைக் கேட்டான். அம்மட்டில் உள்ளம் கனிந்து உருகினான். தன் உள்ளத்தை உருக்கி நெகிழ்வித்த இப்பாடல் ஏது? எங்குளது? இன்னும் உளதா? என்றெல்லாம் ஆராயத் தொடங்கினான். கனவிலும் நனவிலும் அந்த "மூவர் தமிழின்" நினைவாகவே இருந்தான். அவ்வேளையில் திருநாரையூரில் நம்பியாண்டார் நம்பி என்பார் பொல்லாப் பிள்ளையாரின் அருள் பெற்று விளங்குகிறார்;அவர் மன்னரின் துயர் தீர்க்கும் வல்லமை பெற்றவர் என்னும் செய்தி கிடைத்தது. உடனே திருநாரையூருக்கு மன்னன் புறப்பட்டான். நம்பியாண்டாரை வணங்கி எழுந்தான். அருஞ்சுவைக் கனிகளை வழங்கி, பிள்ளையாருக்கு நிவேதனம் செய்தருளுமாறு வேண்டினான். பின் தன் துயரையும் ஆவலையும் எடுத்தியம்பினான்.

மிகவுமொரு விண்ணப்ப மடியேற் குண்டு
வேதியனே கேளென்று விளம்பு வான்மெய்ப்
புகழதுசேர் மூவர்தமிழ் தொண்டர் செய்தி
பூதலத்தில் விளங்கவெனப் போற்றி நின்றான் 1

பிள்ளையாரின் திருவடியில் தலை வைத்து வழிபட்ட நம்பியாண்டாருக்குப் பிள்ளையார் உண்மைகளை உணர்த்தியருளினார்.

முறைகளெல்லாந் திருத்தில்லை மூதூர் தன்னில்
அன்றவர்கை யிலச்சினையால் வைத்தார் மன்ன
ஆராய்ந்து தருகவென வருளிச் செய்தார் 2

இச்செய்தி கேட்ட மன்னவர் உடனே தில்லைத் திருக்கோயிலுக்குச் சென்றார். நம்பியாண்டார் அளித்தருளிய செய்திளைக் குறிப்பிட்டார். தில்லை வாழ் அந்தணர்களோ உடனே எடுத்துத் தருவதாக இல்லை. அறைக்கதவில் மூவர் கையிலச்சனை பொறிக்கப்பட்டுள்ளது. அந்த மூவர் வந்தால் மட்டுமே அறையைத் திறக்க இயலும் என்றார்கள். மன்னன் மூவருக்கும் மூன்று படிமங்கள் செய்து அவற்றை விழாக்கோலத்துடன் கோயிலுக்கு எடுத்து வந்தான். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தர மூர்த்தியார் ஆகியோர் விழாக்கோலத்துடன் வருவதைக் கண்டதும் தில்லைக்கோயில் அந்தணர்கள் தில்லைக்கோயில் பொற்கோயிலுக்குப் பின்புறத்தே இருந்த அறைக்கதவைத் திறந்தனர். என்னே கொடுமை! அரிய ஏடுகள் பலவற்றைச் சிதல்கள் தின்று தீர்த்துவிட்டிருந்தன.

மன்னர் பெருந்துயருற்றார். ஆனால் அவ்வேளையில்

வேண்டுவன வைத்தோமென் றுலகி லுள்ள
மாந்தரொடு மன்னவனுங் கேட்கு மாற்றால்
வானகத்தி லோரோசை எழுந்த தன்றே 3

என்பதற்கிணங்க வான்குரல் ஒன்று இறைவர் திருவருளால் எழுந்தது. மன்னர் தேறினார். ஏடுகளை எடுத்து எண்ணெய் இட்டுத் தூய்மை செய்து திருக்கோயில்களில் அத்திருப்பாடல்களை ஓதி வரச் செய்தனர்.

மூவர் தமிழ் உற்ற சிறப்பை உமாபதியார் கீழ்வருமாறு குறிப்பிடுகிறார்.

அருமறையைச் சிச்சிலிபண் டருந்தத் தேடும்
அதுபோலன் றிதுவென்று முளதா முண்மைப்
பரபதமுந் தற்பரமும் பரனே யன்றிப்
பலரில்லை யென்றெழுதும் பனுவல் பாரில்
எரியினிடை வேவாதாற் றெதிரே யோடும்
என்புக்கு முயிர்கொடுக்கு மிடுநஞ் சாற்றும்
கரியைவளை விக்குங்கன் மிதக்கப் பண்ணுங்
கராமதலை கரையிலுறக் காற்றுங் காணே 4

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தியார் ஆகியோர் வழி இறைவர் அருளிச் செய்த அற்புதச் செயல்களையும் உமாபதியார் விளக்கிச் செல்கிறார்.

## திருமுறைகள்

முதலாம், இரண்டாம் மூன்றாம் திருமுறைகளை அருளிச் செய்தவர் திருஞானசம்பந்தப் பெருமான்(கி. பி. 601 -650) 5.

தமிழ்நாட்டின் சீர்காழியில் திருவவதாரம் செய்தவர்; பதினாறு ஆண்டுகள் வாழ்ந்து சிவப்பேறு பெற்றவர்; இவர் அருளிய பதிகங்கள் பதினாறாயிரம். இன்று இருப்பது முந்நூற்று எண்பத்து நான்கு மட்டுமே. இவர்தம் மூன்று திருமுறைகளும் திருக்கடைக்காப்பு என்றே வழங்கப்பெறும்.

நான்காம், ஐந்தாம், ஆறாம் திருமுறைகளை அருளியவர் திருநாவுக்கரச சுவாமிகள். திருமுனைப்பாடி, திருவாமூரில் திருவவதாரம் செய்தவர். மகேந்திர பல்லவ மன்னன் வாழ்ந்த 7ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர்6. இவர் காலமும் திருஞானசம்பந்தர் காலமும் ஒன்றே. எண்பத்தோர் ஆண்டுகள் வாழ்ந்து சிவபதம் பெற்றவர். இவர் அருளிய திருப்பதிகங்கள் நாற்பத் தொன்பதாயிரம். இன்றிருப்பவை முந்நூற்றுப் பன்னிரண்டு. இவர்தம் திருப்பாடல்கள் தேவாரம் என வழங்கப்பெறும்.

ஏழாம் திருமுறையை அருளியவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். திருமுனைப்பாடி, திருநாவலூரில் திருவவதாரம் செய்தவர். இவர்தம் காலம் ஒன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதி என்பர் ஆய்வாளர்7. இவர் அருளிய திருப்பதிகங்கள் முப்பத் தெண்ணாயிரம். இன்று இருப்பது நூறு பதிகங்கள் மட்டுமே.

எட்டாம் திருமுறையை அருளியவர் மாணிக்கவாசக சுவாமிகள். பாண்டி நாட்டின் திருவாதவூரில் திருவவதாரம் செய்தவர். இவர்தம் காலம் கி. பி. மூன்றாம் நூற்றாண்டு என்பது மறைமலையடிகளாரின் ஆய்வு8. இத்திருமுறை திருவாசகம், திருக்கோவையார் என்னும் இரு நூல்களை உள்ளடக்கியது.

ஒன்பதாம் திருமுறை திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்னும் இரு நூல்களின் தொகுப்பாகும். இவற்றுள் சேந்தனார் என்பார் திருப்பல்லாண்டு பாடியருளினார். ஆக ஒன்பதின்மர் பாடிய இருபத்தொன்பது திருப்பதிகங்களே ஒன்பதாம் திருமுறையாக அமைந்துள்ளது.

பத்தாந் திருமுறை திருமூலர் அருளியது. ஒன்பது பகுதிகளில் (தந்திரங்கள்) மூவாயிரம் திருப்பாடல்களைக் கொண்டது இந்நூல்.

பதினோராம் திருமுறை நாற்பது சிறு நூல்களால் அமைந்த திருப்பாடல்களின் தொகுப்பாகும். இந்நாற்பது நூல்களில் இருபத்தைந்து நூல்கள் சிவபெருமானைப் போற்றுபவை. ஏனையவை முருகன் போன்ற ஏனைய மூர்த்தங்களையும் திருஞானசம்பந்தர் போன்ற அடியார்களையும் போற்றுகின்றன. அந்நூலின் முதற் பாசுரம் சேரமான் பெருமாள் நாயனாருக்குச் சிவபெருமான் எழுதிவிடுத்த திருமுகப்பாசுரமாகும்.

இப்பதினொரு திருமுறைகளையும் நம்பியாண்டார் நம்பியே தொகுத்தருளினார். புலியூரில் இருந்த திருநீலகண்ட யாழ்ப்பாணரின் வழியில் வந்த பாடினி ஒருவரைக் கொண்டு திருமுறைகளுக்குப் பண்ணடைவு செய்யவும் இறைவரே திருவுளம் கொண்டார்.

பன்னிரண்டாம் திருமுறை சேக்கிழார் அருளியது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய திருத்தொண்டர் தொகையும் நம்பியாண்டார் நம்பி அருளிய திருத்தொண்டர் திருவந்தாதியும் சிவனடியார் வாழ்வியல் வரலாறு கூறுவன. இவற்றினை அடியொற்றி ஆனால் ஒரு காவியத்திற்குரிய அணிநலன்களோடு சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தை அருளிச் செய்தார். அந்நாளில் வாழ்ந்த அநபாய சோழன் புறச்சமயக் காவியங்களில் மனம் ஈடுபட்டிருந்த நிலையை எண்ணி வருந்திய சேக்கிழார் பெருமான் சிவநெறியின் உயர்நலம் உணர்த்தும் பொருட்டுப் பெரிய புராணத்தைச் செய்தருளினார். பெரியபுராணம் 12ஆம் நூற்றாண்டில் எழுந்தது.

### எல்லாம் இறைவர் திருமொழியே!

திருமுறையின் திருப்பாடல்கள் யாவும் இறைவர் திருமொழியேயாகும். உயிர்களுக்கு அருள் செய்யும் பொருட்டுக் காணும் உபகாரமும் காட்டும் உபகாரமும் செய்பவர் இறைவர். சத்திநிபாதமுற்ற அடியார்களின் திருவாய் மொழியின் மூலமாக ஏனைய உயிர்களுக்குத் தம் இன்னருளை உணர்த்தி ஆட்கொள்ளும் அருட்செயலாலேயே திருமுறைகளை அருளிச் செய்கிறார் இறைவர். ”பித்தா”எனத் தொடங்கி எழுந்த சுந்தரமூர்த்தியார் திருப்பதிகங்களுக்கு இறைவரே அடியெடுத்துக் கொடுக்கிறார்.

அன்பை யருளி னோக்கி யங்கண ரருளிச் செய்வார்
முன்பெனைப் பித்த னென்றே மொழிந்தனை யாத லாலே
என்பெயர் பித்த னென்றே பாடுவா யென்றார் நின்ற
வன்பெருந் தொண்ட ராண்ட வள்ளலைப் பாடலுற்றார்9

திருநாவுக்கரசருக்கு நாவுக்கரசரென்று பெயரிட்டு மகிழ்ந்தார் இறைவர்.

பாவுற்றலர் செந்தமி ழின்சொல்வளப்
பதிகத்தொடை பாடிய பான்மையினால்
நாவுக்கர சென்றுல கேழினுநின்
னன்னாம நயப்புற மன்னுக. . . . 10

திருஞானசம்பந்தரோ ஐயனின் ஆணைவழி அம்மையின் திருமுலைப்பால் உண்டார். அப்பாலே ஞானப்பால் ஆயிற்று. இதனால் பதிஞானம்

வரப்பெற்றுச் சிவஞானத்தோடு சம்பந்தமுற்றார். அதனாலேயே திருஞானசம்பந்தர் ஆனார்.

அழுகின்ற பிள்ளையார் தமைநோக்கி யருட்கருணை
எழுகின்ற திருவுள்ளத் திறையவர்தா மெவ்வுலகுந்
தொழுகின்ற மலைக்கொடியைப் பார்த்தருளித் துணைமுலைகள்
பொழிகின்ற பாலடிசில் பொன்வள்ளத் தூட்டென்ன......11

இவ்வாறு சிவஞானம் தலைக்கூடிய திருஞானசம்பந்தர் தாம் அருளும் திருப்பாடல்கள் யாவும் இறைவர் திருமொழியே என்பதை "தனதுரை எனதுரையாக...." என்னும் வாக்கால் உணர்த்துகிறார். இவ்வடியார்கள் தாம் செய்யும் பணிகளையெல்லாம் தற்போதமற்றுச் செய்தார்கள். அதனாலேயே அவர்களின் செயல்களும் இறைவரின் செயல்கள் ஆகின.

## திருநெறிய தமிழ்

திருமுறை தமிழ் வேதம். நால்வகை வேதங்கள் பசுவாக , சிவாகமங்கள் அப்பசுவின் பாலாகத் திருமுறை அப்பாலில் படும் நெய்யாக, இறைவனைப் பாடிய மாத்திரத்தில் அருள் தரும் ஆற்றல் உடையவை. வேதங்களைப் பயில்வோர் உபநயனம் செய்து கொள்ளும் த்குதி உடையோராய் இருத்தல் வேண்டும். வடமொழி, தருக்கம், வியாகரணம் போன்ற கருவி நூல்களைப் பயின்றவர்களே வடமொழி நூல்களைப் பயின்று பயன் பெற முடியும். சிவாகமங்களும் வடமொழிப் பயிற்சி உடையாருக்கே பயன் தருவது. ஆனால் திருமுறை, வடமொழி, கருவி நூல் பயிற்சி அற்றாருக்கும் அவ்விரு நூல்களின் சாரத்தையும் பயனையும் எளிதில் தர வல்லது.

திருமுறையின் தோற்றத்தால் சங்கத்தமிழ் தெய்வத் தமிழ் ஆனது. முருகனே தமிழ் தந்த கடவுள் என்பது பண்டை மரபு. ஆனால் பின்னாளில் நாயன்மார்களின் திருப்பாடல்களினால் தமிழ் உண்மையிலேயே "பக்திமொழி" யாகப் பரிணமித்தது என்று துணிந்து சாற்றலாம்.

மற்றுநீ வன்மை பேசி வன்றொண்ட னென்னு நாமம்
பெற்றனை நமக்கு மன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க
அர்ச்சனை பாட்டே யாகு மாதலான் மண்மே னம்மைச்
சொற்றமிழ் பாடு கென்றார் தூமறை பாடும் வாயார் 12

என்று இறைவரே தமிழில் பாடுமாறு சுந்தரமூர்த்தியாருக்கு அருள் செய்த செய்தி பெரிய புராணத்தில் கிடைக்கப் பெறுகின்றது.

"நற்றமிழ் வல்லஞான சம்பந்தன்" என்று சுந்தரமூர்த்தியாரும் தமிழ்த்தோன்றலாம் திருஞானசம்பந்தரைத் தமிழின் துணை கொண்டே போற்றுவார்.

வாட்டமிலா மாணிக்க வாசகநின் வாசகத்தைக்
கேட்டபொழு தங்கிருந்த நீழ்ப்பறவைச் சாதிகளும்
வேட்டமுறும் பொல்லா விலங்குகளும் மெய்ஞ்ஞான
நாட்டமுறும் என்னில்இங்கு நானடைதல் வியப்பன்றே 13

என்று திருவாசகத்தின் உளமுருக்கும் ஆற்றலை வியந்து போற்றுகிறார் திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள்.

ஆறாம் நூற்றாண்டு முதல் பன்னிரண்டாம் நூற்றாண்டு வரை தமிழ் இலக்கியத்தின் இடைவெளியை நிரப்பி அணி செய்த இலக்கியம் பக்தி இலக்கியமே ஆகும். இவ்வகை இலக்கியத்துள்ளும் சைவத்தின் இடம் மிகப் பரந்ததாகும்.

## திருமுறையின் ஆற்றல்.

திருமுறைப் பாடல்கள் உளமுருக்கிப் பதிஞானம் ஊட்டும் பாடல்கள் மட்டுமல்ல; அவை தமிழகத்தில் சிவநெறியை நிலைநிறுத்திய ஆற்றல் மிக்க பாடல்களும் ஆகும். உளமுருக்கும் மென்மையும் சமணர் புத்தரை வெருண்டோடச் செய்யும் வன்மையும் ஒரு சேரக் கொண்ட உயர்தனி இலக்கியம் திருமுறை.

## தத்துவ இலக்கியம்

சைவ சித்தாந்தம் அறிவியல் நோக்கில் மெய்ப்பொருளை நிலைநிறுத்தும் உண்மைகளின் முடிபு. பிரமாணங்களின் துணைகொண்டு சைவம் இதனைச் செய்கிறது. ஆனால் இந்த முடிபுகளையே சாதனையால் செயல்படுத்திப் பயன் கண்டு, இன்புற்றுப் பின் மக்களுக்கு உணர்த்திய நூல் திருமுறை.

சிவநெறியின் தனிப்பெருங்கொள்கைகளுள் ஒன்று இறைவர் தாமே வந்து உயிர்களுக்கு அருளி ஆட்கொள்கிறார் என்பதாகும். இக்கொள்கையைச் சாத்திரமும் பேசுகிறது; தோத்திரமும் பேசுகிறது. ஓர் எடுத்துக்காட்டு:

பன்னியசெந் தமிழறியேன் கவியேன் மாட்டேன்
எண்ணோடு பண்ணிறைந்த கலைக ளாய்த்
தன்னையுந்தன் திறத்தறியாப் பொறியி லேனைத்
தன்திறமும் அறிவித்து நெறியுங் காட்டி
அன்னையையும் அத்தனையும் போல அன்பாய்
அடைந்தேனைத் தொடர்ந்தென்னை ஆளாக் கொண்ட
தென்எறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்
செழுஞ்சுடரை சென்றடையப் பெற்றேன் நானே14

இப்பாடலின் உட்பொருளைச் சுருங்கச் சொல்லி விளக்குகிறது கீழ்வரும் திருவுந்தியார் பாடல்:

மூலை யிருந்தாரை முற்றத்தே விட்டவர்
சாலப் பெரியரென் றுந்தீபற
தவத்திற் தலைவரென் றுந்தீபற15

இவ்வாறே சித்தாந்த சாத்திரங்கள் காட்டும் உண்மைகளுக்கெல்லாம் திருமுறையடியார்களின் வாழ்க்கையில் நடைமுறைச் சான்றுகளைத் தெள்ளிதின் காணலாம்.

## திருமுறையில் அறிவியல்

சைவ சித்தாந்தக் கொள்கைகள் விளக்கும் தற்கால அறிவியல் உண்மைகள் பல அடியார்களின் அழகிய உவமைகளோடு மேலும் தெளிவு பெறுவதை நாம் காண முடியும். மாணிக்கவாசகரின் திருவாசகம் இவ்வகை அறிவியல் உண்மைகளை விளக்கும் தலையாய நூல் எனலாம். அண்டங்களையும் அவை நின்று நிலவும் தன்மையினையும் எளிய அழகிய உவமையால் விளக்குகிறார் அடியார். இறைவரின் பேராற்றலையும் பெருமையையும் விளக்க வந்த திருவாதவூரார்

அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி

ஒன்றனுக்(கு) ஒன்று நின்றெழில் பகரின்
இன்னுழை கதிரின் துன்னணுப் புரைய
சிறிய வாகப் பெரியோன் தெரியின்16 என்பர்.

வீட்டின் சன்னல்களைத் திறந்து வைக்கிறோம். கதிரொளி பாய்ந்து வருகிறது. அக்கதிரொளியில் வீட்டுக்குள் இருக்கும் நுண்ணிய தூசுகள் காற்றிலே மிதந்து கொண்டிருக்கின்றன. மிகப் பெரிய வையாயும் மனிதரின் அறிவுக்கு எட்டாத நிலையிலும் இருக்கும் இக்கோள்கள் இறைவனோடு ஒப்பிடுங்கால் கதிரொளியில் மிதக்கும் சின்னஞ்சிறிய தூசுகளாகிப் போகும் என்பதைக் காட்டி இறைவரின் பெருமையை விளக்குகிறார் மாணிக்கவாசகர். அண்டத்தில் விளங்கும் கோள்கள் காற்றில் மிதக்கும் தூசுகளைப் போல் இருக்கின்றன என்னும் அறிவியல் உண்மை மாணிக்கவாசகரின் விண்ணியல் புலமையைப் புலப்படுத்துகிறது எனலாம். அரனின் திருவருள் பெற்றால் அறிவுலகு நமக்குள் அடங்கிப் போகும் என்னும் உண்மையும் இங்குப் புலப்படுகிறது.

மழை எவ்வாறு உருவாகிறது என்ற அறிவியல் கொள்கை மாணிக்கவாசகரின் திருவெம்பாவைப் பாட்டில் புலப்படுகிறது. பாடல் இது:

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்

என்னத் திகழ்ந்தெம்ம ஆளுடையாள் இட்டிடையின்

மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேல்

பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்

என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்

தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு

முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்17

இப்பாடல், மழையை வேண்டிப் பாடப்பட்டது. பாவை நோன்பின் நோக்கங்களில் இதுவும் ஒன்று. மழைத் தேவதையை வேண்டி வாழ்த்துவதே பண்டை மரபு. ஆனால் , மாணிக்கவாசகர் மழையை வேண்டும் போதே இறைவரின் திருவருளை மழையோடு ஒப்பிடுகிறார். கதிரின் வெப்பத்தால் கடல் நீர் ஆவியாகிக் கருமேகமாகிறது. அம்மையின் கருநிறம் இதற்கு உவமையாகிறது. மின்னல் மின்னுகிறது; அம்மையின் சிற்றிடை மின்னலுக்கு உவமை; அம்மையின் சிலம்போசை இடிக்கு உவமை; வளைந்த புருவம் வானவில்லுக்கு உவமை. இறைவரின் அன்பர்க்கு அம்மை புரியும் அருட்செயல் மழைக்கு உவமையாகிறது.

இவை போன்ற பல அறிவியல் செய்திகளைத் திருமுறையில் பரக்கக் காணலாம்.

## அடியார் வழிபாடு

திருமுறையில் அடியாரைப் போற்றும் அடியாரை எங்கும் காணலாம். அடியாருக்கும் அடியேன் என்று சுந்தரமூர்த்தி நாயனார் பணிந்து கூறிக் கொள்வார். அப்பர் பெருமானைக் குருவாகப் போற்றினார் அப்பூதி அடிகளார். இதனையே மெய்கண்ட சாத்திர நூல்களின் தலைமணியாகிய சிவஞான போதம் வற்புறுத்துகிறது.

செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ
மால்அற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே18

அடியார்களையும் சிவாலயத்தையும் அரன் எனவே ஏற்று வழிபடும் இந்நெறிக்குத் திருமுறை இலக்கியமாகத் திகழ்கிறது எனலாம்.

## சிவப்பேற்றுக்கு வழி

திருமுறைப்பாடல்கள் இறைவரின் மொழிகளேயாகும். அவை ஐந்தெழுத்தை மந்திரமாகவும் திருநீற்றை மருந்தாகவும் தருவன. ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களிலிருந்து விடுதலை பெறும் நெறிகளைச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என வகுத்து வழி காட்டுவது. நாயன்மார்களின் வாழ்க்கை, வாழ்ந்து பயன் பெற்ற வாழ்க்கை. அதுவே நமது வாழ்க்கை நெறியாக வேண்டும்.

## சிந்தனைப்புரட்சி

தமிழகத்தில் ஆறாம் நூற்றாண்டு வாக்கில் எழுந்து வளர்ந்த சிந்தனைப் புரட்சியையும் திருமுறைகளில் காண முடிகிறது. வடமொழியே இறைமொழி என்ற கருத்துவிலங்கு தெறித்து உடைந்தது. "தமிழோடிசைபாடல் மறந்தறியேன்" என்ற அப்பர் பெருமானின் அருள்வாக்கு தமிழுக்கு எழுந்த அரணாகும். பொருளற்ற சடங்குகள் கேள்விக்கு இடமானதும் சமூகத்தின் சாதிக்கொடுமை மிகக் கடுமையாகச் சாடப்பட்டதும் இக்காலத்தில்தான். "நாமார்க்கும் குடியல்லோம்" என்று மன்னனையே எதிர்த்த அப்பர் பெருமான் மக்களாட்சிச் சிந்தனைக்கு வித்திட்ட முதல் மாமனிதர். பெண்கள் சுதந்திரம் போற்றப்பட்டதும் , திலகவதியார், மங்கையர்க்கரசியார், புனிதவதியார் போன்றோர் போற்றி வணங்கப்பட்டதும் இத்திருமுறைக் காலத்திலன்றோ?

## முடிவுரை

சித்தாந்தமும் திருமுறைகளும் அறிஞர்தம் ஆய்வுப் பொருளாகவே இருந்துவிடாமல் அன்பர்களின் வாழ்க்கை நெறியாக மாற வேண்டும். "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என அருளிய திரு மூலரின் சிந்தனை இதுவேயாகும். "இறவாத இன்ப அன்பு" பூண்டு அடியார்கள் வாழ்ந்த அன் றைய வாழ்க்கைமுறை இன்றைய இளஞ்சிவநெறிச் செல்வர்களுக்கு எவ்வாறு பயன்படும் என்று ஆராய வேண்டும். இன்று நம்மவர் எதிர்நோக்கும் சமூக, ஆன்மீக வாழ்க்கைச் சிக்கல்களுக்குச் சைவ சித் தாந்தம் எவ்வாறு வழிகாட்ட முடியும் என்றெல்லாம் ஆய்வுகள் வரவேண்டும். கற்றவர் கல்லாதவர் எல்லாருக்கும் பொதுவில் நடமிடும் இறைவர் சிவ பெருமான். அவர்தம் நெறியும் எல்லாருக்கும் பயன் பட வேண்டும். அறிஞர் உலகம் இதைச் சிந்திக்க வேண்டும்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல் லாம்!"

## அடிக்குறிப்பு

1. கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார், திருமுறை கண்ட புராணம், பாட்டு 9
2. மேலது, பாட்டு 16
3. மேலது, பாட்டு 22
4. மேலது, பாடல் 17
5. திருவாடுதுறை ஆதீனம், அகத்திய மாமுனிவர் திரட்டியருளிய தேவாரத்திரட்டு பக் 6
6. மேலது பக் 10
7. மேலது பக் 17
8. மறைமலையடிகள், மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும், 2ஆம் பகுதி, பக் 940
9. சேக்கிழார், பெரியபுராணம், தடுத்தாட்கொண்ட புராணம், பாட்டு 73
10. சேக்கிழார், பெரியபுராணம், திருநாவுக்கரசு நாயனார் புராணம், பாட்டு 74
11. சேக்கிழார், பெரியபுராணம், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் புராணம், பாட்டு 66
12. சேக்கிழார், பெரியபுராணம், தடுத்தாட்கொண்ட புராணம், பாட்டு70
13. திருவருட்பிரகாச வள்ளலார், திருவருட்பா, 5 ஆம் திருமுறை, பாட்டு 3266
14. திருநாவுக்கரசர், திரு 6, திருத்தாண்டகம்
15. திருவுந்தியார், பாட்டு 12
16. மாணிக்கவாசகர், திருவாசகம், திருவண்டப்பகுதி 16 அடிகள்.
17. மாணிக்கவாசகர், திருவாசகம், திருவெம்பாவை பாட்டு16
18. மெய்கண்டார், சிவஞானபோதம், சூத்திரம் 12

நன்றி: மலாயா அருள் நெறித் திருக்கூட்டப் பவளவிழா மலர்

